# சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVA VIABI

| 03-02-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் தை 20 | வருட சந்தா ₹150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 56<br>வருடம்-113 | இதழ் 5<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## அரசு உதவிபெறும் பள்ளிகள் நடத்திய மாபெரும் கண்டனப் பேரணி

### (PONCEAN - போன்சியான்)

### 25-01-2019, வெள்ளிக்கிழமை - இடம்: புதுவை





**அ**ரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் மற்றும் நிர்வாகத்தினரின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி 25.01.2019 **வெள்ளிக்கிழமை அன்று** பாண்டிச்சேரி கத்தோலிக்க கல்வி நிறுவனங்களின் சங்கம் (Poncean) மாபெரும் கண்டனப் பேரணி நடத்தியது.

கடலூர் ரோடு புனித அந்தோனியார் அரசு உதவிபெறும் பள்ளி வளாகத்திலிருந்து புறப்பட்ட இந்த பேரணியை போன்சியான் (Poncean) அமைப்பு தலைவரும் புதுவை-கடலூர் மறைமாவட்ட பேராயருமான **மேதகு டாக்டர் அந்தோணி ஆனந்தராயர்** அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். அச்சமயம் பேராயர் அவர்கள் தமது உரையில் அரசு உதவி பெறும் கத்தோலிக்க பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை, காலி இடங்களை நிரப்ப வேண்டிய கட்டாயம் ஆகியவற்றையும், பள்ளி நிர்வாகத்தில் பெற்றோர்களின் பங்களிப்பையும் அரசுக்கு உணர்த்தும் வகையில் சிறப்பான சொற்பொழிவு ஆற்றினார்.

பேரணியானது போன்சியான் துணைத்தலைவரும் மறைமாவட்டத்தின் முதன்மை குருவுமான **அருட்தந்தை ஆ. அருளானந்தம்** அவர்கள் தலைமையில் புறப்பட்டது. போன்சியான் செயலர் **அருட்தந்தை** M. **சுவாமிநாதன்** வழிநடத்தினார். கல்வி ஆணையச் செயலர் **அருட்தந்தை** R. **ஜோசப்ராஜ்** அவர்களும் பங்கேற்று சிறப்பித்தார். பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் பல்வேறு அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துக் கொண்டனர்.

**கலந்துக்கொண்ட பள்ளிகள்:** இமாகுலேட் பள்ளிகள் - 9, கொன்சகா பள்ளிகள் - 5, பாத்திமா பள்ளி, புனித அன்னாள் பள்ளி, புனித அந்தோனியார் பள்ளி, பெத்தி செமினேர் பள்ளி, குளுனி பள்ளி, மதர்தெரேசா பள்ளி, Our Lady of Lourdu வில்லியனூர் பள்ளி, டான் போஸ்கோ பள்ளி, வைஸ்மேன் பள்ளி, பாகூர் அன்னுசாமி பள்ளி, சொஸெதே ப்ராக்ரஸ் பள்ளி மற்றும் போப் ஜான் பால் கல்லூரி. இத்துடன் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என 5000-க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர். பேரணியானது மறைமலை அடிகள் சாலை, அண்ணாசாலை, நேருவீதி, **மிஷன்** வீதி மற்றும் புனித ஆஞ்ச் வீதி (St.Ange Street) வழியாக சட்டசபை நோக்கி சென்றது.

பேரணி முடிவில் பாத்திமா பள்ளி ஆசிரியர் கிறிஸ்டோபர் அவர்கள் காலி பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் பணிபுரிபவர்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும், 7-வது ஊதியக்குழு பரிந்துரையை அமலபடுத்தவேண்டும், நிர்வாக மானியம் வழங்க வேண்டும், அரசு தரும் மானியத்தை குறைக்கவோ நிறுத்தவோ கூடாது என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். போன்சியான் செயலர் அருட் தந்தை சுவாமிநாதன் கோரிக்கை மனுவை பேரணியில் பங்கு பெற்றவர்களுக்கு வாசித்து காண்பித்தப்பின் மாண்புமிகு முதல்வர், கல்வி அமைச்சர், கல்விச்

*தொடர்ச்சி 2 ஆம் பக்கம்*

ஆசிரியர் பேனா...

# இயேசுவைப் போல் செபிப்பதே இன்றைய நம் மறைப்பணி

இன்றைய சூழலில் தின இதழ்கள், வாராந்திர, மாத மிருமுறை, மாத பத்திரிகைகளைத் திறந்தால் அதிர்ச்சிக்குரிய தகவல்களைத் தான் காண்கிறோம். குறிப்பாக தின இதழ்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள்கடத்தல், வன்முறை, போராட்டம்,சைபர் க்ரைம் (வலைத்தள குற்றங்கள்) இப்படி எதிர்மறை நிகழ்வுகளையே அதிக அளவில் வாசிக்க நேரிடுகிறது. நாற்பது ஆண்டுகளுக்கு முன் ரேடியோ, தின இதழ்கள்தான் செய்தி பரப்பு சாதனங்களாக இருந்தன. மக்களின் தொடர்பு கூறுகளும், நகர்வும் குறிப்பிட்ட வட்டத்துக்குள் இருந்தன. ஆனால் இன்று வலைத்தளங்கள், இணைத்தளங்கள், வாட்ஸ் ஆப், எஸ்எம்எஸ், முகநூல் என்று பலவாறாக வந்த மின்னணு சாதன வசதிகள், நொடிப் பொழுதில் செய்திகளை பரப்பவும் பெறவும் பெரிதும் உதவுகின்றன. இவற்றில் நல் விளைவுகளும் தவிர்க்கமுடியாத தீயவிளைவுகள் இடம் பெறுவது இன்று அன்றாட நிகழ்வு.

**மனித இருப்பை** இரண்டாக பிரித்துப் பார்க்கும்போது நினைவுடன் இடம்பெறும் நிகழ்வுகளும், நினைவுக்குப் பின்னால் நிழலாடும் உளவியல் ஆன்ம சமய இலக்குடைய சலசலப்புகளும் இருப்பதை எவரும் மறுப்பதற்கில்லை. பெரும்பாலான வன்முறை சம்பவங்களுக்கு சமய பின்னணி அழுத்தம் தந்து, தகாத செய்பாடுகளுக்கு அடிநாதமாய் இருப்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். மேம்போக்காக மக்கள் நம்புவதற்காக வெளியாகும் பசப்புரைகளும் பரப்புரைகளும் சமயத்தையும் சுயநல வழிமரபையும் பின்னணியில் மறைத்து வைத்திருப்பதை எந்த ஒரு சீர்நிலை சிந்தனை யாளனும் இனம் கண்டுகொள்ள முடியும். இன்றைய அரசியல் சமூக சமய அரங்குகளை அலசிப் பார்க்க தைரியம் உள்ள எந்த மனிதனும் இதைக் கண்டு முணுமுணுப்பதும் பொருமுவதும் இயல்பானது. சொல்வது ஒன்றும் செய்வது ஒன்றுமாக புலப்படும்போது, ஆங்கில நகைச்சுவை குறும்படம் - டாம் அண்ட் ஜெர்ரி - பூனையும் சுண்டெலியும் அடிக்கிற கொட்டங் கள்தான் நினைவுக்கு வருகின்றன. சொல்வதும் எழுதுவதும் எளிது, ஆனால் நிஜத்தை வாழும் அடித்தட்டு வர்க்கமும், நிராகரிக்கப்படும் நடுத்தர வர்க்கமும் அனுபவிக்கும் வலி வருத்தம் வேதனை அவமானங்கள் சொல்லி மாளாது. எந்த ஒரு குறிப்பிட்ட கட்சியையோ, குழுவையோ, சமயத்தையோ குறைசொல்வது நோக்கமல்ல. நமக்குமுன் வாழ்ந்த குறைந்தபட்சம் இரு தலைமுறையினரின் அனுபவம் நமக்கு பாடம் தரவேண்டும்; அல்லது நமது சொந்த கடந்த கால அனுபவங்கள் நம்மை எச்சரிக்க வேண்டும். நல்ல மனசாட்சி உள்ளவருக்கு இந்த இடித்துரைத்தல் இடம் பெறலாம். ஆனால் வார்த்தையில் வடிக்கவோ, வெளியில் சொல்லவோ தவிர்க்க இயலாத அச்சம் குறுக்கிடுகிறது. குடும்ப பாதுகாப்பு, நண்பர்களின் பாதுகாப்பு, நம் சொந்த பாதுகாப்பு, நற்பெயர், எதிர்காலம் பற்றிய எண்ணம் ஆகியன எழும்போது "நமக்கென்ன" என்று பலர் வாளாவிருந்து விடுகிறார்கள். ஒருவர் செய்வது தவறு என்று தெரிந்தும் "கண்டு கொள்ளா மல்" போவது, அந்த தவறான காரியத்துக்கு ஒத்துப்போவதாக ஆகிவிடும் அல்லவா? துணிந்து பேசியவர்கள் எழுதியவர்கள் என்ன ஆனார்கள் என்பதை எண்ணும்போது "நமக்கேன் வம்பு" என்று ஒதுங்கிப்போவது அந்த நேரத்திற்காவது புத்திசாலித் தனம் என்று தோன்றவில்லையா?

**சலனமற்று அமைதியாக** நகர்ந்து கொண்டிருந்த வாழ்வில் சலனங்களையும் அதிர்வுகளையும் உருவாக்கியது யார்? அரசியல், சமய, சமூக, ஊடக, நீதி, பொருளாதார, தனிமனித சுதந்திர தளங்களில் இந்த அதிர்வுகளுக்கு மூலகாரணம் எது? சுயநலம்! சுயநலம்தான்!! நாம், நமது, நம்முடைய என்ற நிலையை மாற்றி "நிலைச்சார்பு"(polarisation) கொள்கைக்கு அழுத்தம் தந்து, நலிந்தவர்களை மேலும் நலிவுறச் செய்யும் பெரும்பான்மை தர்க்கவாதம் அனைத்து தரப்பினரையும் நிலை குலையச் செய்கிறது. நான், எனது, என்னுடைய என்று பிடிவாதமாக அடுத்தவரை தாழ்ந்து போகச் செய்யும் குணம் வெறுக்கத்தக்கது தானே?

**இருப்பினும் கிறிஸ்தவர்களாகிய** நாம் சிறுபான்மையினராக இருந்தாலும், இந்நாட்டின் நலனுக்கும் வளங்களுக்கும் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் நமது தன்னலமற்ற பபங்களிப்பை எளிதில் எவரும் மறுத்திடவோ மறந்திடவோ இயலுமா? வேறுபாடற்று வேறுபாடு களையவும், நலிவுற்றோர் நல்வாழ்வு பெறவும், அடித்தட்டினர் வாழ்வில் உயரவும் எண்ணற்ற கிறிஸ்தவ நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஆற்றி வரும் அறப்பணிகள், கல்விப்பணிகள், மருத்துவப் பணிகள், சமூகப் பணிகள் அளவிட முடியாதது. திருஅவை யின் மறைப்பணி தன்மையையும் அர்ப்பணத்தையும் முறையாக நாட்டிற் காகவும் மக்களுக்காகவும் பங்களிக்கும் செயலை கொச்சைப் படுத்தும் வன்மனத்தினரை என்னவென்று சொல்வது! "தந்தையே இவர்களை மன்னியும் இவர்கள் செய்வது என்னதென்று இவர்களுக்குத் தெரியவில்லை" என்ற இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்க முயல்வதே சிறந்தது என்று இன்றைய சமூக அரசியல் சமய நிகழ்வுகளை உணர்ந்த எவரும் கூற இயலும். சிலுவை துயரத்தையும் வலியையும் வேதனையையும் காயங்களையும் மரணத்தையும் செபமாக்கிய இயேசுவே நமக்கு சிறந்த முன்மாதிரி. எண்ணற்ற புனிதர்கள் அவ்வாறு தான் தங்கள் வாழ்வை இயக்க இறைக்கரத்தில் ஒப்புவித்தார்கள். இயேசுவே நம் வாழ்வை இயக்கட்டும். அவர் செபித்தவாறே நாம் செபிக்க முயல்வதே இன்றைய நமது மறைப்பணி. ●

---

முதல் பக்கத் தொடர்ச்சி...

செயலர் ஆகியோரிடம் போன்சியான் நிர்வாகிகளும் ஆசிரியப் பிரதிநிதிகளும் சென்று அளித்தனர்.

பேரணியில் பங்கு பெற்றவர்களுக்கு புதுச்சேரி, இமாகுலேட் மேல் நிலைப்பள்ளி முதல்வர் அருட்சகோதரி. **தாரியா செல்வராணி** அவர்கள் நன்றி கூறினார்கள். இப்பேரணியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அனில்பால் கென்னடி, திரு. சிவா, திரு. A. அன்பழகன் ஆகியோர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

**கோரிக்கைகள்:**

1. புதுவை அரசு ஆணை G.O.Ms.No.86 யை 27.07.2006 மூலம் உருவாக்கப்பட்ட பணியிடங்களிலும் பணி ஓய்வு மூலம் ஏற்பட்ட காலிப் பணியிடங்களிலும், பல ஆண்டுகளாக அரசு ஊதியமின்றி தொகுப்பூதியத்தில் பணிபுரியும் ஏறக்குறைய 360 ஆசிரியர்களின் போதனா மானியத்தை உடனடியாக வழங்க வேண்டும் என புதுவை அரசை வற்புறுத்துகிறோம்.

2. நிரந்தர ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதம் கடைசி வேலை நாளில் சம்பளம் வழங்க வேண்டும். 7-வது ஊதியக்குழு பரிந்துரை உடனே அமுல்படுத்த வேண்டும்.

3. 22 ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கப்படாமல் இருக்கின்ற நிர்வாக மானியத்தை வழங்கி பள்ளிகளை சீராக நிர்வகிக்கும் சூழ் நிலையை உருவாக்கும்படி அரசை வற்புறுத்துகின்றோம்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்...




ஆண்டின் பொதுக்காலம் 5-ம் ஞாயிறு (10-2-2019) எசா.6:1-8 1கொரி.15:1-11 லூக்.5:1-11

# “என்னைப் பின்செல்”

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்
துணை முதல்வர்,
பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



**அ**ழைத்தல் என்பது கடவுளின் கொடை. நம்முடைய கிறிஸ்துவ வாழ்வின் ஆணிவேர். இது செல்வந்தருக்கு மட்டும் கிடைக்கும் இலவச இணைப்பு அல்ல. உயர்ந்த மதிப்பில் உள்ளவர்களுக்கு மட்டும் கிடைக்கும் உத்தரவாதமான ஓலையும் அல்ல. படித்தவர்க்கு கிடைக்கும் பல்கலைக் கழக பட்டமும் அல்ல. மாறாக அழைத்தல் என்பது ஏழை-பணக்காரர், உயர்ந்தவர்-தாழ்ந்தவர், படித்தவர்-படிக்காதவர் என்ற எந்த வேறுபாடுமின்றி இறைவனின் வார்த்தைகளை வாழ்வாக்குபவர்களையும் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்களையும் குறித்துக் காட்டுகின்றது. எனவே இறையாட்சியின் கனவை நனவாக்கத் துடிக்கும் ஒவ்வொரு வரையும் கடவுள் அழைக்கிறார். தகுதியற்றவர்களை அழைத்து தகுதியுள்ளவர்களாக மாற்றுகின்றார். திறமை யற்றவர்களை அழைத்து திறமையுள்ளவர்களாக மாற்று கின்றார். எனவே நாம் எந்த அளவிற்கு நம்மையே இழந்து தாழ்ச்சியான உள்ளத்தோடு திருமுழுக்கின் வழியாக பெற்றுக் கொண்ட அழைத்தலை முழு ஈடுபாட்டோடு வாழ்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்கத்தான் இன்றைய ஞாயிறு திருவழிபாட்டின் மூன்று வாசகங்களுமே நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

**இழத்தல்:** இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு சீடர்களை அழைத்தபோது அவர்களின் ஒரே சொத்தான படகையும், வலைகளையும் மற்றும் பெற்றோரையும் விட்டுவிட்டு இயேசுவை பின் தொடர்ந்தனர் என்று வாசிக்கக் கேட்டோம். இமைகள் பிரிந்தால்தான் பார்வை. இதழ்கள் பிரிந்தால்தான் மணம். உதடுகள் பிரிந்தால்தான் வார்த்தைகள். பாறை தன்னை இழந்தால்தான் சிற்பம். இவ்வாறு எங்கு இழப்பு இருக்கிறதோ அங்கே அதன் பயன் பலமடங்காகிறது. இயேசுவை பின்பற்றுவது என்பது ஒரு உன்னதமான வாழ்க்கை முறை. அது உயரிய கொள்கை களைக் கொண்டது. அப்படிப்பட்ட வாழ்வை தமதாக்கிக் கொள்ள விரும்புகிறவர்கள் எதையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும். இழக்கத் தயாராக இருப்பவர்கள் மட்டுமே இயேசுவை முழுமையாக பின்பற்ற முடியும்.

**அடியேனை அனுப்பும்:** இன்றைய முதல் வாசகம் எசாயா இறைவாக்கினரின் அழைத்தலைப் பற்றி கூறுகின்றது. கடவுள், “என் பணிக்காக நான் யாரை அனுப்புவேன்?” என்கிறார். உடனே இறைவாக்கினர் எசாயா தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு தன்னுடைய தகுதியற்ற நிலையை கூறுகின்றார்: “நான் அழிந்தேன். ஏனெனில் நான் தூய்மை யற்ற உதடுகளைக் கொண்டவன்.” கடவுள் தனது நோக்கத்தை நிறைவு செய்ய பலவீனமானவர்களையே தேர்ந்துகொள்கிறார். அஞ்சாதே! நான் என்றும் உன்னோடு இருக்கிறேன் என்று கூறி எசாயாவை அழைத்தபோது, எசாயா இறைவாக்கினர், “இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” என்றார். கடவுள் எசாயாவின் உதடு களை பேச்சின் மூலம் அறிவிக்கும் அடையாளமாக மாற்றி, அவரை பெரிய இறைவாக்கினராக மாற்றுகின்றார். இயேசு ஆண்டவர் கூறிய வார்த்தை: “நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை, நான்தான் உங்களைத் தேர்ந்து கொண் டேன்” (யோவா.15:16) என்பது மிகவும் உண்மையல்லவா?

**நான் இருப்பது கடவுளின் அருளால்தான்:** கடவுளு டைய அருள், ஆசீர் இல்லையென்றால் நாம் எதையுமே செய்ய முடியாது. நாம் வாழ்வதும், இயங்குவதும், இருப்பதும் கடவுளின் அருளால்தான் இதனை நன்கு புரிந்துகொண்டு தன் அழைத்தலின் மேன்மையை நன்கு உணர்ந்தவர் திருத்தூதர் புனித பவுல் அடிகளார். இதனை இன்றைய இரண்டாம் வாசகத்தில் கொரிந்து நகர மக்களுக்கு, தான் எவ்வாறு உயிர்த்த ஆண்டவர் இயேசுவால் அழைப்பு பெற்றேன் என்பதை தெளிவாக விளக்குகிறார்: “நான் திருத்தூதர்களிடையே மிகவும் கடையவன், திருத்தூதர் என அழைக்கப்படத் தகுதியற்றவன்” என்கிறார். மேலும் நான் இப்போது இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான் அவர் எனக்களித்த அருள் வீணாகிவிடவில்லை என்றும், “கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு அனைத்தையும் இழந்துவிட்டேன், பெற்ற அழைத்தலை உறுதியாக அறிக்கை யிடும் அளவுக்கு அவருடைய புனித வாழ்வு அமைந்தது.

**மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்:** “விழுவது தவறல்ல, வீழ்ந்தே கிடப்பதுதான் தவறு”, “தோற்பது தவறல்ல, தோற்றாலும் மீண்டும் முயற்சி செய்யாமல் இருப்பதுதான் தவறு” என்று கூறுவார்கள். இன்றைய நற்செய்தியில் பலமுறை வலைகளைப் போட்டும், மீன் ஒன்றும் கிடைக்காமல், இனிமேல் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று பேதுருவும் மற்ற சீடர்களும் தங்களது வலைகளை பழுது பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பேதுருவுக்கு கடல் அன்னையைப் பற்றி நன்றாகத் தெரியும். கடலைப் பற்றி அவர் அறியாதது ஒன்றுமில்லை. இதுதான் அவரது வாழ்க்கை. அவர் வழக்கம் போல கடலுக்குச் சென்று மீன் ஒன்றும் கிடைக்காத நிலையில் கடற்கரைக்கு திரும்பி தனது வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த அதே வேளையில் இயேசு மீண்டும் வலைகளைப் போடச் சொல்கிறார். நிச்சயமாக பேதுருவின் உள்ளுணர்வு இன்னொரு முறை முயற்சி செய்யலாம் என்று சொல்லி யிருக்கும். மற்றொரு மனம் இவ்வளவு முயற்சி செய்து கிடைக்காதது இனிமேலும் கிடைக்கவாப் போகிறது? என்றும் சொல்லியிருக்கும். ஆனால் பேதுரு இயேசுவின் வார்த்தையின் மீது நம்பிக்கை வைக்கிறார். மற்றொரு முறை முயற்சி செய்ய முடிவு செய்கிறார். பகல் பொழுதில் வலைகள் கிழியும் அளவுக்கு பெருமளவு மீன் கிடைக்கிறது. “நான் பாவி, என்னைவிட்டு போய்விடும்” என்று பேதுரு தன்னுடைய தகுதியற்ற நிலையைக் கூறுகிறார். ஆனால் இயேசு “நீ இதுமுதல் மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்” என்று கூறி பேதுருவை அழைக்கிறார். இயேசுவின் உயிர்ப்புக்கு பிறகு மக்களுக்கு எவ்வாறு துணிச்சலோடு நற்செய்தியை அறிவித்தார் என்று புனித லூக்கா, “திருத்தூதர் பணிகள்” (2:14; 3:1-26; 4:1-22) நூலில் பதிவு செய்துள்ளார்.

**என்னைப் பின்செல்:** என்னைப் பின்செல்-பழகிப் போனவன் பழக வந்தவனுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூப்பிடும் வார்த்தை இது. பார்த்தவன் பார்க்காதவனை அழைக்கும்போது விடுக்கும் கூக்குரல் இது. வழி தெரிந்தவன் வழி தெரியாதவனிடம் சொல்லுகிற வாக்கியம் இது. என்னைப் பின்செல்-அருட்தந்தையர்களுக்கும், அருட் சகோதரர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும் துறவறத் தார்க்கும் மட்டும் கொடுக்கப்படும் அழைப்பு அல்ல. இல்லறத்தாராக இருந்தாலும் சரி, துறவறத்தாராக இருந் தாலும் சரி, இது நம் ஆண்டவர் திருமுழுக்கு பெற்ற எல்லோருக்கும் இன்று கொடுக்கும் அழைப்பு. இறைவாக் கினர் எசாயாவை, திருத்தூதர் பவுலை, புனித பேதுருவை அழைத்த அதே இறைவன் நம் எல்லோரையும் அழைக்கிறார். அவருடைய அழைத்தலை ஏற்று நல்ல கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழ முயற்சிப்பேனா? அல்லது பெயரளவில் கிறிஸ்தவனாக, கிறிஸ்தவளாக வாழ்ந்து கொண்டு கடவுளு டைய அழைப்பை தட்டிக்கழித்துக் கொண்டிருக்கிறேனா? நம்மையே தாழ்த்தி, நம்மையே இழந்து அவர் பணி செய்ய முன்வருவோம், இறைவனுடைய அருளை நிறைவாக பெற்றுக்கொள்வோம். ●



# இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (11)

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**இத்தலைமுறையின் மக்களை யாருக்கு ஒப்பிடுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பானவர்கள்?** (லூாக் 7:31)

தனக்கே பதில் தெரியாத குழப்பமான ஒரு கேள்வியை இயேசு விடுப்பதுபோல உள்ளது. மக்கள் தாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று அறியாதவர்கள் போலவும் எந்தப் போதகத்திற்கும் ஒத்து வராதவர்கள் போலவும் வாழ்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம் இயேசு அனுப்பப் பட்டுள்ளார். இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்துக்கு எப்படிப் போதிப்பது என்பது அவருடைய கேள்வி. இத்தகைய இக்கட்டான நிலைகளில் பணிபுரியும் திருஅவையின் பணியாளர்களுக்கு இது ஆறுதலான கேள்வி.

எடுத்துக்காட்டாக ஒரு குருவானவர் வந்தார், பள்ளிக் கூடம் கட்டினார், மக்களுக்குக் குடிநீர் வழங்க கிணறு வெட்டினார். "இவர் ஏன் குருவாக வந்தார்? சமூகப்பணி புரியச் சென்றிருக்கலாமே" என்றார்கள். வேறு ஒருவர் வந்தார். திருப்பலி, திருமணி ஆராதனை, அருங்கொடைக் கூட்டங்கள் என்று பல பக்தி முயற்சிகளைச் செய்தார். "இவருக்கு மக்கள் நல்வாழ்வில் அக்கறையே இல்லையா" என்று சொன்னார்கள்.

இயேசுவோ ஒன்றும் செய்ய இயலாதவராக இருக்கவில்லை. எது முக்கியம்? எது மேலானது? எது நித்தியமானது? எதைவிட எது உயர்ந்தது? எது நித்தியமானது? ஆன்மாவை இழப்பதால் என்ன பயன்? என்பது போன்ற சிறந்த தெரிந்து தெளிதல் (discernment) வழி முறையைப் போதித்திருக்கிறார். அதைப் பயன்படுத்தி நாமே மனப்பக்குவம் உள்ளவர்களாகத் தேர்ந்து தெளிந்து வாழ அழைக்கிறார்.

**"கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ?"** (லூாக் 10:15)

இந்தக் கேள்வி மக்களிடம் அல்ல, ஒரு நகரிடம் விடுக்கப்படுகிறது.

புனித இரண்டாம் ஜான்-பால் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் முதன் முறையாகப் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றபோது அந்த நாட்டிடமே ஒரு கேள்வியை விடுத்தார்: "ப்ரான்ஸ் நாடே நீ உன் திருமுழுக்கை என்ன செய்தாய்?" அவ்வாறாக இயேசு கப்பர்நாகுமுவைப் பார்த்து மேற்கூறிய கேள்வியைக் கேட்கிறார்.

கப்பர்நாகும் இயேசுவின் சொந்த ஊர், அவர் வாழ்ந்த நகரம். இது கலிலேயாக் கடலோரத்தில் உள்ளது. மீன்வளம் அந்த ஊரின் செல்வம் கொழிக்கும் தொழில். அங்குதான் இயேசு தனது பெரும்பாலான புதுமைகளைச் செய்தார். இயேசுவின் போதனையாலும், புதுமைகளாலும் அவர்கள் மனம் மாறாததால் மேற்கூறிய கேள்வியைக் கேட்டார். நமக்கும் இந்தக் கேள்வி பொருந்துமல்லவா? நமக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகள், அருள் வரங்கள் ஏராளம். எனவே நம்மையும் பார்த்து இயேசு இந்தக் கேள்வியைக் கேட்கிறார்.

**"சாத்தானை எப்படி ஓட்ட முடியும்?"** (மாற்கு 3:23)

**சாத்தானும் தனக்கு எதிராகத் தானே பிளவுப்பட்டுப் போனால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்?** (லூாக் 11:18)

கச்சிதமான இரு கேள்விகள்… ஆசிரியர்கள் கேள்வித்தாள் தயாரிக்கும்போது திறமைசாலிகள் மட்டும் பதிலளிக்கக் கூடிய ஒருசில கேள்விகளையும், சராசரி திறமை உள்ளவர்களுக்காக பல கேள்விகளையும், வேறுசில மந்த புத்தியுள்ளவர்களும் பதிலளிக்கக் கூடிய கேள்விகளையும் தயாரிப்பர். அவ்வாறு மேலே உள்ள இரு கேள்விகளும் கடைசி வகை மாணவர் களுக்கான கேள்விகள்.

பரிசேயர்கள் நன்றாகவே பதில் கண்டுபிடித்திருப்பார்கள். தாங்கள் இவ்வளவு சுலபமாக இயேசுவால் முட்டாள்கள் ஆக்கப்பட்டுவிட்டோமே என்றும் புரிந்துகொண்டிருப்பார்கள்.

**சாத்தான் சாத்தானையே ஓட்டினால் அவன் தனக்கு எதிராகத் தானே பிளவுபட்டுப் போவான். அப்படியானால் அவனது அரசு எப்படி நிலைத்து நிற்கும்? நான் பெயல்செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகிறேன் என்றால் உங்களைச் சார்ந்தவர்கள் யாரைக்கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்?** (மத் 12:26-27) **ஆகவே அவர்களே உங்கள் கூற்றுத் தவறு என்பதற்குச் சாட்சிகள்.**

விடைத்தாளுக்கு மறு ஆய்வு செய்ய அது மாணவர்களின் பெற்றோருக்கே திருப்பி அனுப்பப்படுகிறது. என்ன அருமையான விவாதம்.

**முதலில் வலியவரைக் கட்டினாலன்றி அவ்வலியவருடைய வீட்டுக்குள் நுழைந்து அவருடைய பொருள்களைக் கொள்ளையிட முடியுமா?"** (மத் 12:29)

இங்கு வலியவனான சாத்தானை இயேசு கட்டிப் போட்டுவிட்டார். திருவெளிப்பாடு கூறுகிறது: "அலகை என்றும், சாத்தான் என்றும் அழைக்கப்பட்ட அரக்கப் பாம்பை அவர் பிடித்தார். அதுவே தொடக்கத்தில் இருந்த பாம்பு. வானதூதர் ஆயிரம் ஆண்டுகளுக்கு அதைக் கட்டிவைத்தார். பின்னர் அதைப் படுகுழியில் தள்ளி, அடைத்து, முத்திரையிட்டார்". (தி.வெ. 20:2-3) எனவே சாத்தானைத் தான் வென்றுவிட்டேன் என்று குறிப்பிடுகிறார்.

**"விரியன் பாம்புக் குட்டிகளே, தீயோர்களாகிய நீங்கள் எவ்வாறு நல்லவை பேச முடியும்?"** (மத் 12:34)

இந்தக் கேள்விக்கு இயேசுவே பதிலளித்துக்கொள்ள வேண்டும். நல்ல மரம், நல்ல கனி பற்றிப் பேசியபின் இதைச் சொன்னார். அவர்கள் நல்ல மரங்களாக இராததால் நல்லவை பேச அவர்களால் முடியவில்லை என்பதை இங்குச் சுட்டிக்காட்டுகிறார்.

**"என் தாய் யார்? என் சகோதரர்கள் யார்?"** (மத் 12:48)

நீங்கள் யாரை என் உறவினராகக் கணிக்கிறீர்கள்? என்பதுதான் இந்தக் கேள்வியின் பொருள். இரத்த உறவால் கணிக்கிறார்கள் என்பது இயேசுவுக்குப் புரிகிறது. ஆனால் இயேசு கொண்டு வந்த இறையரசில் இரத்த உறவுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. இறைச்சித்தத்தை நிறைவேற்றுபவர்களுக்கே அது உரிமை ஆகும். அவருடைய புதிய குடும்பம் இரத்த உறவு என்னும் எல்லையைக் கடந்தது. இறைபணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர் களிடமும் இயேசு இதை எதிர்பார்க்கிறார்.

**" இந்த உவமை உங்களுக்குப் புரியவில்லையா? பின்பு எப்படி உவமைகளையெல்லாம் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்?"** (மாற் 4:13). விதைப்பவர் உவமையைப் புரிந்துகொள்ளாத தம் சீடர்களைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்கிறார். இயேசு போதிக்கும் பாடம் சீடருக்குப் புரியவில்லை என்றால் எப்படி உலகெங்கும் சென்று போதிக்கப் போகிறார்கள்? எதைப் போதிக்கப் போகிறார்கள்? திருஅவையின் போதனையையும் நாம் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

- தொடரும்



# திருஅவையை நம்புகிறேன்

– சுவாமி ஆ. லூயிஸ்.

"ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்கத் திருச்சபையை நம்புகிறேன்" என்பது கத்தோலிக்க விசுவாசம். திருச்சபை என்னும் தாயை அன்பு செய்வதும், நம்புவதும், கிறிஸ்தவ வாழ்வின் நெறியாகும். திருச்சபையை புரிந்து கொள்வது என்பது நமது முயற்சி; திருச்சபையை நம்புவது என்பது ஆண்டவரின் அருட்கொடையாகும். அறிவும் விசுவாசமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வதே முறையானதாகும். விசுவாசத்தை ஆழப்படுத்தினால் என்றும் எல்லார்க்கும் நல்லதாகும் என உணர்வோம்.

**திருஅவை படும் பாடுகள்:** பணிபுரியும் திருச்சபையாக ஆரம்பித்தது, காலப்போக்கில் ஆட்சி செய்யும் திருச்சபையாக விளங்கியது, தொடர்ந்து படிநிலை அதிகார திருச்சபை ஆனது. மறுமலர்ச்சியின் பயனாக மீண்டும் பணிபுரியும் திருச்சபையாக விளங்க முயன்று வருகிறது. நமது நாட்டை பொருத்தமட்டில் அயல் நாட்டு தூதுரையாளர்கள் தங்களால் முடிந்ததை இறை அருளோடு நிறைவேற்றி மண்ணின் மைந்தர்களிடம் இந்தியத் தலத்திருச்சபை ஒப்படைக்கப்பட்டு நூறு ஆண்டுகட்கு மேலாகி உள்ளது. இன்னமும் நமது திருச்சபை இனம், மொழி, வழிபாடு என பிளவுபட்டிருக்கிறது. ஓரளவு சான்று வாழ்வு இருந்தாலும், வளரக் கூடியவை நம்மில் நிறைய உண்டு. விசுவாசமே இதற்கு அடித்தளமாகும். ஆயர்கள் முதல், இறுதி ஆள்வரை உயிர்த்த ஆண்டவரின் ஆவியால் பிணைக்கப்பட்டு இயக்கப்பட்டால் பல அதிசயங்களை நாமும், நமக்குப் பின் வருகின்றவர்களும் காண்பார்கள் என்பது உறுதியாகும்.

**தாயகத் திருச்சபை:** அயல்நாட்டு அடையாளமாய்தான் இன்றும் இந்தியத் திருச்சபை விளங்கி வருகிறது. இந்திய நாட்டின் மண்வாசனைக்கு ஏற்ப தாயகப்படுத்தி, உயிர்த்த ஆண்டவரை மையப்படுத்தி இந்தியத் திருச்சபையை அடிப்படையில் இந்தியப் பண்பாட்டு உணர்வோடும், மாநிலங்களில், அதற்குரிய சிறப்புப் பண்போடும் நம்மை நாம் காண, வாழ, வழிபட முடியாமல் இருப்பது திருச்சபையின் போதனைப்படி தழுவி அமைத்து தாயகத் திருச்சபையாக விளங்க வேண்டியதை நாம் விரைவு படுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

இந்திய நாட்டின் இறை அனுபவமும், கிறிஸ்தவ விசுவாசத்தின் அனுபவமும் இணைந்து "இந்தியக் கத்தோலிக்கத் திருஅவை" என்று மலர்ந்து, வளர்ந்து, சான்று பகர்வது முக்கியம். இருப்பதைக் கட்டிக்காப்பதை விட இருக்க வேண்டியதை உருவாக்க முக்கியமாக திருஆட்சியாளர்கள் முதல் முயற்சி எடுப்பது முக்கியம். திருஆட்சியாளர்களோடு துறவிகள், விசுவாசிகள் ஒத்துழைத்தால் இன்றைய நூற்றாண்டில் ஒரு புதியப் பாதையை நமக்குள் நாம் ஏற்படுத்திக் கொள்வது, அங்கீகாரம் பெறுவது என்று நாம் மனநிறைவோடு கிறிஸ்தவ சான்று வாழ்வை வாழ இயலும்.

திருச்சபைக்குள் இடம்பெறும் பல்வேறு வாழ்வு வழிபாட்டு முறைகளை நமக்குள் வைத்துக்கொண்டு, தேசிய அளவில் நாம் அனைவரும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் என்ற ஒருமைப்பாட்டை அறிக்கையிடுவது காலத்தின் கட்டாயமாகும். இந்நிலைக்கு உயிர்த்த ஆண்டவர் அழைக்கிறார் என்பது உறுதி. நாம் சுயநலத்தை தனியாக, குழுவாக விட்டுவிட்டு பொது நலனை முன்வைப்பது கட்டாயமாகும். முயற்சிகளை மேற்கொண்டு செபிப்போம்.

**போதனையும் சாதனையும்:** உயிர்த்த ஆண்டவரின் ஆற்றலுக்கு ஈடு இணை கிடையாது என்பதால், அவருக்குச் செவிமடுப்போம், அவர் சொற்படி நாம் அன்னை மரியாள் எதிர்பார்ப்பதுபோல பயணிப்போம். தேசிய அளவில் ஒப்புதலும், மாநில அளவில் திட்டமும், மறைமாவட்ட அளவில் செயல்பாடும் இடம் பெற்றால் போதனை சாதனையாகும். சாதனை சான்றாகும், சான்று நற்செய்திப் பணியாகும். எளிதான காரியங்களான கோவில் கட்டுவது, கெபி அமைப்பது, கொடிமரம் எழுப்புவது, நிதியைப் பெருக்குவது போன்ற காரியங்களை விட்டுவிட்டு, மக்களைக் கட்டி எழுப்புவது, உருவாக்குவது என்பது முதலிடம் பெற வேண்டும் என்பதை உணர்வோம். வாய்ப்பை இப்போது இழந்தால் மீண்டும் பெறுவது கடினமாகும். நமது சபையில் இருக்கின்றவர்களும், பிரிந்து வேறு சபைகளை நாடுவதை நாம் உணர்ந்து தகுந்த பதில் கொடுப்போம்.

படைப்பின் வளர்ச்சியைத் தான் மனித குலம் பெரிது என்று கருதுகிறது. படைக்கின்றவர் நம்மோடு இருக்கிறார் என்ற வளர்ச்சியைவிட சடங்கு, வழிபாடு, அருட்சாதன வாழ்வு என்று வெளிப்புற வாழ்வோடு கிறிஸ்தவ வாழ்வு நின்று விடுகின்றது. அகவாழ்வு தான் உயிர்த்த ஆண்டவரின் ஆவி வாழ்வாகும். உயிர்த்த ஆண்டவரின் ஆவியால் பிணைக்கப்பட்ட ஒரு சமூகம்தான் திருச்சபை ஆகும். வழிநடத்தக் கூடியவர்களின் அனுபவ வழிபாடுதான் மக்களையும் அனுபவத்திற்கும் ஆழமான நம்பிக்கைக்கும் அழைத்துச் செல்லும். ஆயன் எவ்வழியோ அவ்வழியே மந்தைகளும் என்பதை மறக்கக் கூடாது. தானும் வளராது, மற்றவர்களையும் வளர விடாதிருப்பது நன்றன்று. தனது மந்தைக்காக தன்னை இழக்கின்றபோதுதான் மந்தை வளமாக இருக்கும்.

**ஆண்டவர் - திருச்சபை:** ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புவதில் சிக்கல்கள் இருக்காது. ஆனால் அவரின் மணமகளாக விளங்கும் திருச்சபையை நம்புவது கேள்விக் குறியானால், இயேசுவின் மீதுள்ள விசுவாசம் சுயநலத்தைப் பாதுகாக்கும் கவசமாகிவிடுகிறது. எளிதானதை ஏற்பது சுலபம், ஆனால் கடினமானதை ஏற்பதே பொருள்மிகு விசுவாசமாகும். திருச்சபையை நமது புத்தியால், சுயநல உணர்வோடு அதிகமாக விமர்சனம் செய்கின்றோம். திருச்சபையை இன்னமும் திருஆட்சியாளர்களோடுதான் இணைத்துப்பார்க்கின்றோம், நாம்தான் திருச்சபை என்ற உணர்வு வளரவில்லை.

ஆயர்கள், குருக்கள், துறவிகள் தொடர் பயிற்சியில் பங்கெடுத்து, மக்களையும் தொடர் பயிற்சியில் உருவாக்க மறைமாநில மாமன்றம் மேற்கொள்ளும் தீர்மானங்களைச் செயல்படுத்த மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் குழு முழு முயற்சியை மேற்கொள்வது முக்கியம். வியாபி வழியாக பரந்த விழிப்புணர்வை மக்கள், வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்தி, ஒருவர் ஒருவருடைய தூண்டுதலில் நல்லவை நடக்கும் என்று முதல் முயற்சிகளை முன் வைப்போம். கிறிஸ்தவ வாழ்வும் வழிபாடும் தலத்திருச்சபையில் ஆர்வமிக்கதாய் அன்றாடம் விளங்கினால் எவ்வளவோ மேலானது என்று உணர்வோம். "கண்டு கொள்ளாமல்" இருப்பதுதான் மிகப்பெரிய பாவமாக அலகை நம்மை ஆட்கொள்கிறது. நாமும் ஏமாந்து போகிறோம். உயிர்த்த ஆண்டவரின் ஆவி நம்மை ஆட்கொண்டு முழுவதுமாக நம்மையும் மற்றவர்களையும் புதுப்பிப்பதாக! ●



339ஆவது பிறந்தநாள் பெருமங்கலம் காணும்

# வண்டமிழ்த் தொண்டர் வீரமாமுனிவர்



*பேராசிரியர் முனைவர்* பா. வளன் அரசு,
*பாளையங்கோட்டை.*

**1) முன்னுரை:** பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டுக்கு இயேசு பெருமானின் தொண்டராக வருகை தந்த பெருந்தகை வீரமாமுனிவர் 1711 முதல் 1747 வரை **முப்பத்தாறு ஆண்டுகள்** திருமறைக்கும், தீந்தமிழுக்கும் விழைந்து உழைத்துள்ளார்; தம் வாழ்நாளில் **முப்பத்தைந்து நூல்கள்** நல்கிய பெருமிதம் பொருந்தியவர். அகராதி ஆக்கம், இலக்கணப் படைப்பு, எழுத்து வரிவடிவச் சீர்த்திருத்தம், உரைநடை மறுமலர்ச்சி, கடித இலக்கிய வளர்ச்சி, காப்பியப் புனைவு, சித்த மருத்துவ நூலாக்கம், சிறுகதைத் தோற்றம், சிற்றிலக்கிய எழுச்சி, தமிழ் இலத்தீன் உறவுப் பாலம், மொழியியல் முனைப்பு, வள்ளுவத்தை வையக நூலாக்கும் முயற்சி, சமய நல்லிணக்கச் சால்பு என்று **பல்வேறு துறைகளில் முறையாகவும் நிறைவாகவும் நற்பணிகள் பல புரிந்துள்ளார். வீரமாமுனிவருக்குத் தமிழிலக்கியச் சோலையில் அழிவில்லா உருவச்சிலை ஒன்று அமைந்திருக்கிறது; கண்ணுள்ளவர்கள் கண்டு கொள்ளலாம்** என்று அறிஞர் பி. சிறீ. ஆச்சார்யா நான் அறிந்த தமிழ் மணிகள் என்னும் நூலில் (ப.289) கூறியது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

**2) பணித்தளங்கள்:** வீரமாமுனிவர் கோவில்பட்டிக்குக் கிழக்கே உள்ள காமநாயக்கன்பட்டியில் தம் அருள்பணி வாழ்வைத் தொடங்கினார். வேம்பாறு, தூத்துக்குடி, மணப்பாடு ஆகிய இடங்களில் திருமறைத் தொண்டாற்றியுள்ளார். விருத்தாசலம் அருகே உள்ள கோனான்குப்பத்தில் அன்னை மரியாளுக்குத் திருக்கோவில் எழுப்பி அவ்வூரை ஆரியனூர் என்று போற்றி அங்கிருந்தே இயேசுவின் தந்தை யோசேப்புக்கு **வாடாதமாலை என்று பொருள்தரும் தேம்பாவணிக் காப்பியத்தை எழுதியுள்ளார்.** அன்னை மரியாளை ஆரியனூரில் **பெரியநாயகி** என்று அழைத்த வீரமாமுனிவர், கொள்ளிடத்தின் வடகரையில் அமைந்த ஏலாக்குறிச்சியில் **அடைக்கலநாயகி** என்று பாராட்டி மகிழ்ந்தார். அன்னையின் அருட்காவலில் அமைந்த ஏலாக்குறிச்சியைத் திருக்காவலூர் என்று வழங்கச் செய்தார். அடைக்கல அன்னையின் பெயரால் ஒரே பெண்பாற் கலம்பமாகிய **திருக்காவலூர்க் கலம்பகம்** பாடியுள்ளார். திருச்சிராப்பள்ளி அருகமைந்த **ஆவூரில் பணியாற்றியபோது, தேம்பாவணிக் காப்பியத்துக்குத் தாமே உரை எழுதி முடித்துள்ளார் (1726-29).** ஐந்திலக்கண நூலாகத் தாம் இயற்றிய தொன்னூல் விளக்கம் எளிதாகவும் தெளிவாகவும் பயன்பட வேண்டும் என்று எண்ணித் தாமே அதற்கு உரையும் வரைந்து **திருமதுரைச் செந்தமிழ்த் தேசிகர்** என்று புலவர் பெருமக்களால் போற்றிப் புகழப்பட்டுள்ளார். மறைமொழி வாயினன், மலித்தவத்திறைவன், நிறைமொழிக் குரவன், நிகரில் கேள்வியன் என்று எல்லோராலும் ஏற்றுப் போற்றப் பெறும் வீரமாமுனிவரின் வித்தகத் தமிழ்ப்பணிகள் வியந்து பாராட்டத்தக்கவை.

**3) அகராதி ஆக்கம்:** வீரமாமுனிவர் 1732 ஆம் ஆண்டு பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு நிலைகளில் அருஞ்சொற்களுக்கு பொருள் காணும் வகையில் அகர வரிசைப் படுத்தி வழங்கியதே **சதுரகராதி.** ஒரு பொருள் குறித்த பல பெயர்ச் சொற்களையும் பல பொருள் குறித்த ஒரு பெயர்ச்சொற்களையும் முறையே பெயர் அகராதியாகவும் பொருள் அகராதியாகவும் தந்துள்ளார். தொகையகராதியின் வாயிலாக, **பிரபந்த வகை தொண்ணூற்றாறு** முதலாயவற்றை எடுத்து மொழிந்துள்ளார். பதினையாயிரம் சொற்களுக்கு விளக்கம் நல்கும் இந்நூல் **மொழிக்களஞ்சியம்** என்று போற்றத்தக்கதாகும். (முனைவர் சூ.இன்னாசி, சதுரகராதி பதிப்புரை)

வீரமாமுனிவர் 1743 ஆம் ஆண்டு ஆக்கிய தமிழ் **இலத்தீன் பேச்சுமொழி** அகராதியில் ஒன்பதாயிரம் தமிழ்ச் சொற்களுக்கு விளக்கம் அமைந்துள்ளது. **காய்ச்சல் வகை பதினைந்து** பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. மக்கள் வாழ்வியலை விளம்பும் பழமொழிகளும் நல்வாழ்வுக்கு உதவும் பழமொழிக் குறிப்புகளும் இந்நூலில் விளங்குகின்றன.

வீரமாமுனிவர் **போர்த்துக்கீசு - தமிழ் இலத்தீன் அகராதியினை** 1744 ஆம் ஆண்டு எழுதியுள்ளார். இவ்வகராதியில் நாலாயிரத்து முந்நூற்று ஐம்பத்து மூன்று போர்த்துக்கீசியச் சொற்களுக்குத் தமிழிலும் இலத்தீனிலும் பொருள் கூறப்பட்டுள்ளது. வீரமாமுனிவர் **பிரெஞ்சு - தமிழ் அகராதியை** 1744 ஆம் ஆண்டு எழுதியுள்ளார். வீரமாமுனிவரின் **தமிழ் - ஆங்கில அகராதி** பற்றி எலிசாகூல் 1844 ஆம் ஆண்டு வெளிவந்த வீரமாமுனிவர் வேதியர் ஒழுக்கம் என்னும் நூலின் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

**4) இலக்கணப் படைப்பு:** வீரமாமுனிவர் **கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம், திறவுகோல்** ஆகிய மூன்று நூல்களை இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். அவை முறையே, பேச்சுத் தமிழ்,ஏட்டுத் தமிழ், பாட்டுத் தமிழ் இலக்கணம் விளம்புபவை. **கொடுந்தமிழ் இலக்கணம்** 1738 ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் அச்சாயிற்று. இரேனியசு எழுதிய தமிழ் இலக்கணத்திற்கு இந்நூலே முன்னோடியாகும். எழுத்து முதலாகக் கவிதைக் கலை முடிவாக நூற்றிருபது செய்திக் கூறுகளைச் செந்தமிழ் இலக்கணம் தருகிறது. இந்நூலில் சீவகசிந்தாமணி முதல் நான்மணிக்கடிகை வரை பல்வேறு நூல்களிலிருந்து வீரமாமுனிவர் தக்க எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளார். தாவீதரசரின் முதற் சங்கீதம் வீரமாமுனிவரால் பதினான்கு அடிப்பாடலாக எழுதப்பட்டு இந்நூலில் இடம் பெற்றுள்ளது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களையும் முந்நூற்று எழுபது நூற்பாக்களில் சுருக்கமாகச் சொல்வது **தொன்னூல் விளக்கம்.** இவ்விலக்கண நூல் மருள் நீக்கிப் பொருள் விளக்கம் அனைத்தும் வழங்கு வதால் இந்நூலைத் தெருட்குரு என்று கலை வல்லார் பாடியுள்ளார். (முனைவர் ச.வே. சுப்பிரமணியன், தொன்நூல் விளக்கம், ப.171). **இந்நூல் பொருளிலக்கணத்துக்குப் புதிய விளக்கம் தருகிறது.** இலக்கிய வகைகள் முப்பத்தைந்தினை நூற்பாவாலும், ஐம்பத்தாறினை உரைநடையாலும் விளக்கு கிறது. **சவலை வெண்பா, மணிமாலை, எண்வகைப் புத்தணிகள்** ஆகியவை வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கம் வாயிலாகத் தந்துள்ள புதுக்கொடைகள் ஆகும்.

**5) எழுத்து வரிவடிவச் சீர்திருத்தம்:** வீரமாமுனிவர் தமிழில் எகர, ஒகரங்களையும் ஏகார ஓகாரங்களையும் ஒற்றைக்கொம்பு, இட்டைக் கொம்பு வரி வடிவங்களையும் தெளிவாக எழுத உதவியவர் ஆவார். மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் புள்ளி பெற்று வருவது போன்று உயிரெழுத்துக் களான எகர ஒகரங்களும் புள்ளி பெற்று வரும் என்றார் தொல்காப்பியர்; புள்ளி பெறாத எகர ஒகரங்களே நெடிலாக அமைந்தன. **நெடில் எழுத்துக்களை ஏகார ஓகார எழுத்துக் களாகக் கீழே கோடு இழுத்தும் சுழித்தும் பயன்படுத்தும் வரிவடிவமாற்றத்தை வீரமாமுனிவர் கொண்டு வந்த செய்தி**யைக் கொடுந்தமிழ் இலக்கணத்துள் அவரே பெருமிதத்துடன் கூறியுள்ளார். எழுத்து வரிவடிவச் சீர்திருத்தம் பின்னர் பெரியார் நூற்றாண்டு விழா வேளையில் ஆகார ஐகார ஒகர ஓகார வடிவங்களில் மேலும் மாற்றம் பெற்றது. (ணா, றா, னா, லை, ளை, ணை, னை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ).

- தொடரும்...



பாராளுமன்றத் தேர்தல் வருகிறது! நம்மவர் சிந்தனைக்கு!!

## நல்லிணக்கம் நம் பாதை! நற்செயல் நம் வாழ்வு!

- வெட்டிவயல் வளவன்.

1. புனிதமும் நேயமுடன் பாரில் மனிதம்
அணியணிசேர் கட்சிக்கே வாக்கு - இனியெங்கள்,
நல்லிணக்கக் கொள்கை இது! எம்மவரின் பாதை என்பேன்!
அல்இணக்கம் தூளாகும் தூற்று!

2. இறை அருளின் அன்புமொழியும் இன்னல்சேர் வன்மக்
கறைபடிந்தார் வெம்மொழியும் வேண்டா - திரைக்கலை
வீரமேன்? வேற்றுரைகள் நம்புதில்லை - அன்புணர்வாய்
பாராளும் நல்லிணக்கம் கோர்த்து!

3. அருள்நெறி நல்லறங்கள், சார்ந்த நலன்கள்
இருளகற்றும் பண்பாட்டின் சொந்தம் - திருக்கோயில்
பொன்னாட்டை ஒற்றுமையை இன்ப அன்பை நல்லிணக்கப்
புன்னகையே வெல்லுமினி காண்!

4. கிறிஸ்தவம் (இ) அல்லாரிடம் நம்முறவு வாஞ்சை
உரையாடல் அன்பாலே பூக்கும் கரைபட்ட
காலங்கள் இங்கினிமேல் வாராது! நாவினிக்க
ஞாலங்கள் நமதென்போம் சேர்ந்து!

5. ஆதாரம் யேசுவழி அன்பமைதி பாரினிலே
வேதாந்த மூளைஉடல் இசுலாமும் - போதிமரம்
பௌத்தம் இதழ்களாய் நல்சமணம் கைகளாய்
ஔடதம் நல்லிணக்கம் ஆகு!

6. வாழ்க்கைக்குப் பாதைசொன்ன ஆன்றோர் சமயங்கள்
பாழ்பட்டு கட்சிகளால் அன்பில்லா! சீழ்பிடித்த
உள்ளம் வழிபாட்டில் பண்பாட்டில் நல்லிணக்கம்
கொள்! அதுவே! ஆன்மீக மாண்பு!

7. நாட்டின் மரபுகள் வேற்று சமயத்தின்
கோட்பாடும் நம்மவரும் போற்றவேண்டும் நாட்டின் மேல்
பற்றும் உரிமைக்குப் போராடும் பண்பினரைப்
பற்றிவாழும் நல்லிணக்கம் போற்று!

8. சாதிமுறை நல்சமய பேர்விழாக்கள் யாவுமே
மோதும் குழப்பத்திற் கல்லவே - "யாதுமூரே
யாவரும் கேளீர்" "பிறப்பொக்கும்" பாதையே
ஓவியமாய் தந்தவரம் ஓது!

9. ஈரமுடைய நெஞ்சுரத்தால் பால்நினைந்தூட்டும் தாயாய்
மாரிபோல மானுடத்து தொண்டுசெய்! தூரமில்லை
"நல்லிணக்கம் நம்பாதை! நற்செயல் நம்வாழ்வு"
நல்லதே வெல்லுமினிப் பார்!

10. "நல்லோர்க்கும் தீயோர்க்கும் வான்பொழியச் செய்கிறவர்"
"எல்லோர்க்கும் எல்லாமும் ஈந்திடுவார்" - நல்லிணக்கம்
வெற்றிடமாய் போனதால் இப்பூமிப் பேரழிவு
கற்றிடுவோம் நற்செயல் நாடு!

11. சீர் ஆரோக்... எண்ணமும், குன்றக் குடியாரின்
போற்றும்நல் சிந்தனையும் முன்இணைய - பார்இசுலாம்
சான்றாமை பல்சமய நட்பு, அருள் பேரவையும்
தேன்தமிழ் நல்லிணக்கம் தேடு!

12. வாடுபயிர் கண்டபோது வாடுமுள்ளம்! தேடுகல்வி
நாதியற்றார் வாழ்வுகண்டு ஈகுமுள்ளம் - நீடுபுகழ்
நல்லிணக்கம் நற்சமய வாழ்வு நம் பாதையே
நல்லிதயம் நற்செயல் காட்டு.

**குறிப்பு:** சீர் ஆரோக்.... = ஆரோக்கியசாமி அமரர், பேராயர் ம. ஆரோக்கிய சாமி; குன்றக்குடியார் அமரர் குன்றக்குடி தெய்வசிகாமணி அடிகளார். இசுலாம் சான்றோர்கள் இணைந்து 1982. குமரி மாவட்ட சமய, இனக் கலவரத்தில் அமைதிகண்டு நல்சமய உறவாடல் (2ம் வத்.சங்கமம் வலியுறுத்தும்) திருவருட்பேரவை உருவாக்கி சமூக சமய நல்லிணக்கத்தைப் பேணி வளர்த்தனர். அது மீண்டும் எழுச்சிபெறல் வேண்டும் என்பதே இன்றைய நாள் சிந்தனை!

112 இளம் உள்ளங்களுக்கு

## இனி போதும் எப்போதும்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**பரிசோதனைக்கு வந்த நோயாளி:** ஒருவர் உடல் நலக்குறைவு காரணமாக தன் உடல்பரிசோதனைக்காக ஒரு டாக்டரின் பரிசோதனைக் கூடத்திற்கு சென்றார். பரிசோதனைக்கு பிறகு தாழ்போட்டிருந்த கதவை நெருங்கிய போது, டாக்டர் பக்கம் திரும்பி, "டாக்டர் எனக்கு சாவு என்றாலே பயமாக இருக்கிறது. மரணத்தின் மறுபக்கம் என்ன இருக்கிறது? சொல்லுங்கள்" என்றார். டாக்டர் சுருக்கமாக, "எனக்கு தெரியாது" என்று பதிலளித்தார். "உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவராயிற்றே மறுபக்கம் என்ன இருக்கிறது என்று தெரியாது என்கிறீர்களே" என்றார்.

**கதவுக்கப்பால்:** இருவரும் பேசிக்கொண்டிருந்த சமயம் டாக்டர் மூடியிருந்த கதவின் கைப்பிடியை பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது மறுபக்கம் கனைப்பது போலும், சுரண்டுவதுபோலும் சத்தம் கேட்டது. டாக்டர் கதவைத் திறந்ததும் ஒரு நாய் வேகமாக உள்ளே நுழைந்து தன் வாலை ஆட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.

**டாக்டர் தந்த விளக்கம்:** டாக்டர் நோயாளி பக்கம் திரும்பி, "என்னுடைய நாயை கவனித்தீரா? அது இந்த அறையில் முன்பு இருந்ததே இல்லை. இந்த அறையின் உள்ளே என்ன இருக்கிறது என்பதும் அதற்கு தெரியாது. ஆனால் இந்த அறையின் உள்ளே அதன் எஜமான் இருந்தார் என்பதை தவிர வேறு எதுவும் தெரியாது. கதவு திறக்கப்பட்டதும் எந்த பயமும் இல்லாமல் உள்ளே பாய்ந்து வந்தது" என்றார்.

மேலும், "இறப்புக்கு பிறகு அந்த பக்கம் என்ன இருக்கிறது என்பதை பற்றி நான் அறிந்தது மிகக் குறைவே! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாக எனக்கு தெரியும். என் எஜமான் (கடவுள்) அங்கே இருக்கிறார் என்பது மட்டும் சர்வ நிச்சயம். அதனால் சந்தேகமோ, பயமோ ஏதுமில்லை" என்றார். "இது போதும். இனி எப்போதும் நிம்மதியாக இருப்பேன், நிம்மதியாக இறப்பேன்" என்றார் நோயாளி.

**சிந்திக்க:** கடவுளின் கட்டளைகளை சரியாக கடைபிடித்து வாழும் மனிதர்கள் கடைசி காலக்கட்டத்தில் கலங்கவோ கலக்கமடையவோ தேவையில்லை என்பது சரிதானே? ●

## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி:

"நண்பர்களே, இயேசுவில் நம்பிக்கை வைப்பதற்கு அவர் நமக்குக் கற்றுத் தருகிறார், உங்களை வீழ்த்தும் குரல்களைத் தவிர்த்து, ஊக்கப்படுத்தும் குரல்களைத் தேடி, அவற்றுக்குச் செவிசாயுங்கள்"



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். *ச.சாமிமுத்து,* திருச்சி.



## 21-ஆம் படலம்

வாதை 8– வெட்டுக்கிளிகள் – ஆண்டவர் மோசேயை நோக்கி “கல் மழைக்குத் தப்பி நாட்டில் நிற்கும் எல்லாப் பயிர் பச்சைகளையும் தின்று தீர்க்க எகிப்து நாடெங்கும் வெட்டுக்கிளிகள் வரும்படியாக எகிப்து நாட்டின்மேல் உன்கையை நீட்டு” என்றார்.

காப்பியப் பாடல் 1062

**25 மோசே கூறியவற்றை மறுக்கும் மனப்பாங்குடன், “இதெல்லாம் வேண்டாம். உங்களில் ஆண்கள் மட்டும் போய் ஆண்டவருக்கு வழிபாடு செய்யுங்கள். நீங்கள் விரும்பியதும் இதுவே!” என்றான். (விப.10:11)**

இப்படிக் கடவுளின் தூதர் கபரியேல்
ஒப்பியே மோசே உரைத்த நற்செய்தி
அக்களிப் போடே ஆர்ப்பரித் தாடி
ஒக்களைக் கூவி உரைத்தஅவ் வேளையில்,
களவுளப் பார்வோன் கபட நாடகம் *(களவுள-கபடஉள்ளம்)*
அளவிறந் தாடினான் சோதரர் திகைக்கவே!
அவர்களை நோக்கிப் பார்வோன் பேசினான்,
“தவறுகள் நேரும், மோசே கேளும்!
உங்களை நானும் குழந்தைக ளோடு
அங்கெது நடக்கும் எனவறி யாது
போங்கள் என்றே அனுப்பியே வைத்தால்,
தாங்கா தெனதுளம் துன்பம் எண்ணியே!
அதனால் இதுவெலாம் வேண்டவே வேண்டாம்!
இதமாய் நானுமக் குரைப்பது கேட்பீர்,
உங்களில் ஆண்கள் மட்டுமே சென்று
பொங்குணர் வோடு ஆண்டவர்க் காங்குச்
செய்வீர் வழிபா டனைத்தும்; அதைத்தான்
மெய்யாய் நீவீர் விரும்பினீர்” என்றே
இருமனத் தோடு இயம்பினன் மன்னன்
கரும்விழி தெறிக்க விழித்தவர் பார்த்தே!

காப்பியப் பாடல் 1063

**26 இறைவனின் ஆணைக்கு எதிராகப் பார்வோன் பேசியதைக் கேட்ட மோசேயும் ஆரோனும் திகைப்புற்று, அவன் பேச்சை ஏற்காது நோக்கிய அவ்விருவரையும், “இதன்பின் பார்வோன் அவர்களைத் தன் முன்னிலையிலிருந்து துரத்திவிட்டான்.”**

இறைவனின் ஆணைக்(கு) எதிராய் மன்னவன்
முறைபிறழ் மனத்தெழு அவனது முடிவின்
படியவன் புகன்றதைக் கேட்டதிர் வுற்றனர்!
கொடியவன் பேச்சுக் குதர்க்கமாய் இருப்பதை
வெறுப்புடன் கேட்ட மோசே அவனது
மறுப்புரை உள்பொதி வஞ்சக நஞ்சதை
தெள்ளத் தெளிவாய்ப் புரிந்த வராக
உள்ளத் திலேற்கா உணர்வொரு நோக்கவே,
களவுள மன்னவன் அவர்நோக் குட்பொருள்
அளந்தறிந் ததிர்ந்தான்! அதனால் சினமெழ
நெருப்பெனக் காய்ந்து நெஞ்சதை நிமிர்த்தி,
அருகிலா தகன்று ஓடுங் களென்றே
துரத்தினான் அவ்விரு சோதரர் தம்மையே
விரக்தியின் பிடிக்குள் அகப்பட் டுழன்றவன்!

**தொடரும்...**


**Wanted Bride**

Wanted a R.C. bride, Doctor or Lecturer from God fearing family aged between 28 to 32, for a R.C. groom M.S. (ortho) aged 35, working as a Surgeon in a well reputed Medical College in Bangalore.

*Contact:* 9880129828, 0824 - 2444153


# இதுதான் உண்மையான அன்பா!

–G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.



எனக்குத் தெரிந்த ஒரு மருத்துவமனையில் ஒரு மருத்துவர் இருந்தார். அவர் பேராசிரியராகவும் பணியாற்றினார். ஓய்வு பெறும் வயதை எட்டும் நிலையில் இருந்தார். அவருடைய குடும்பத்தில் ஒரு சோகமான நிகழ்ச்சி நடந்தது. அவருடைய அன்பு மனைவி இயற்கை எய்துவிட்டார். அதிர்ச்சி அடைந்தார். என்ன செய்வது, கடவுள் சித்தம். அனைத்து உறவினர்களும் அவர் மனைவி இறுதி சடங்கிற்கு ஏற்பாடு செய்தார்கள். அத்தருணத்தில் அவள் அணிந்திருந்த அத்தனை நகைகளையும் கழட்டினார்கள். அவள் சுண்டு விரலில் இருந்த அரை பவுன் மோத்திரத்தை கழற்ற முடியவில்லை. எவ்வளவு முயற்சித்து பார்த்தும் அந்த மோதிரம் அனைவராலும் எடுக்க முடியவில்லை. சிலர் யோசனை கூறினார்கள், அவள் கட்டை விரலை வெட்டி அந்த மோதிரத்தை எடுத்து விடலாம். இதற்கு இந்த மருத்துவர் சம்மதிக்கவில்லை. பரவாயில்லை அரை பவுன் மோதிரம் தானே, என் மனைவியோடு போகட்டும் என்று கூறினார். இதை அனைவரும் உண்மை என்று நம்பி ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார்கள். இந்த மருத்துவர் சொன்னாரேத் தவிர, எப்படியாவது இந்த அரைப் பவுன் மோதிரத்தை எடுக்க வேண்டும் என்று ஒரு திட்டமிட்டார். தன் வகுப்பில் படிக்கும் நான்கு சீனியர் மாணவர்களை அழைத்து, நீங்கள் அனைவரும் மயானத்திற்கு சென்று, பிணம் எரிந்தவுடன் சாம்பலில் உள்ள இந்த அரைப்பவுன் மோதிரத்தை, அது உருகிய நிலையில் இருந்தாலும், எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று உத்தரவு போட்டார். மேலும் இந்த நிகழ்ச்சி யாருக்கும் தெரியக் கூடாது; இரகசியமாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். மருத்துவருடைய உத்தரவுக்கு ஏற்ப நான்கு சீனியர் மாணவர்களும் போர்வையோடு மயானத்தில் அமர்ந்து கொண்டார்களும். இந்த நிகழ்ச்சி நடந்தது ஏறத்தாழ டிசம்பர் மாதம். கடும் குளிரில் பல மணி நேரங்கள் மயானத்தில் உட்கார்ந்துவிட்டு அந்தப் பிணம் சாம்பலாகி இருக்கிற இடத்திற்கு சென்று புரட்டிப் பார்த்து இந்த அரைப் பவுன் மோதிரத்தை உருகிய நிலையிலிருந்து எடுத்து அதிகாலை பேராசிரியர் வீட்டிற்குச் சென்று அவரிடம் ஒப்படைத்தார்கள். எந்த அளவுக்கு இந்த நிகழ்ச்சியை அவர் இரகசியமாக வைத்திருந்தாரோ, அந்த அளவுக்கு மேலாக இந்த நான்கு சீனியர் மாணவர்களும் மற்றவருக்கு வெளிப்படுத்தி விட்டார்கள். அன்பு மனைவிக்காக அரைப் பவுன் மோதிரத்தை அந்தப் பேராசிரியர் இழக்கக் கூடாதா என்று ஒருவாய்பட அனைவரும் பேசினார்கள்.

பணம் முக்கியம்தான், பணம் இல்லாமல் இந்த உலகில் வாழ முடியாது. இதைவிட சிறந்தது நல்ல பண்புகள். பணத்தை நாம் தேடிப் போவதை விட பணம் நம்மைத் தேடி வர வேண்டும். பணத்திற்கு அதிகப்படியான மதிப்பளித்து, மதிப்பளிக்க வேண்டிய மனிதனை மறக்கக்கூடாது. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயலாக படைக்கப்பட்டவர்கள். இன்று உலகில் வெறும் பணம் படைத்தவனுக்கு வரலாறு இல்லை. மாறாக நற்செயல் செய்தவர்களுக்கு வரலாறு உண்டு. குறிப்பாக குடும்பத்தில் பணத்திற்கு அதிகமாக மதிப்பளித்து விட்டு, குடும்பத்தை தாழ்நிலைக்கு அழைத்து செல்லக் கூடாது. பணத்தாசை, பதவியாசை என்று அலைவதை விட்டுவிட்டு, மனித மாண்பை அடைந்து வாழ முயற்சிக்க வேண்டும். இதற்கு உதவி செய்ய கடவுள் எப்போதும் தயாராக இருக்கிறார்.●

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2019-2020** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி -186



**பிப்ரவரி மாத வெளியீடு. (2019)**

**அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.**

வாரம் தவறாமல் 113 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்து வரும் வாசகர் களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். நீ யாருக்கு உதவி செய்தாலும் உனக்கு உதவிட யாருமில்லை, யாருக்கு உண்மையாய் இருந்தாலும் முடிவில் ஏமாற்றப்படுபவன் நீயே. நீ யாருக்கு நல்லது நினைத்தாலும் உனக்கு நல்லது நடக்காது. நன்றி இல்லாத மனிதர்களிடத்தில் நன்றியை எதிர்பார்க்காதே. நீ உனக்காக இரு; நீ நீயாக இரு என்று இணைய தளத்தில் வந்த செய்திகளை நம் வாழ்வில் கண்முன் கொண்டு வந்தால் வேதனைப்படுவோம். நம்மைப் படைத்து வழிநடத்தி வரும் இறைவனை எப்படி நேசிக்கின்றோம்? தவக் காலத்தில் தவம், ஜெபம், இவைகள் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போல் அமைந்தாலும் இவைகளை தவக்காலத்தில் மட்டும் அல்ல எல்லா நேரங் களிலும் போற்றுவோம். சிறப்பாக ஒரு மனிதனின் வாழ்க்கை விண்ணகத்தை நோக்கியே வாழ்வதற்காகவே மண்ணகத்தில் பிறக்கின்றோம் என்பதை முழுமையாக உணர்ந்து வாழ்க்கை நிலையை மாற்றி என்றும் இறைவனுக்கு நன்றியுள்ளவர்களாகவும், இறைவனை போற்றுபவர்களாகவும் வாழ்ந்து என்றும் மகிழ்ச்சியுடன் வாழ ஜெபத்துடன் வாழ்த்துகிறேன்.

இறைஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு**9 1) பதில்களை 10.03.2019 க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறையில் முதல் 10 நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி❖குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன். 6)அல்லதுd,l`hk9 rnnr`hl`qh`q`idmc`m ?f1`hk-bnlஎன்றமுகவரிக்கும் அனுப்பலாம்.

**இடமிருந்து வலம்:**

1. வழிமரபினர்க்கு இந்த ............ அனைத்தை யும் தருவேன்.
3. அவனது எல்லை ............. வரை பரவியிருக் கும்.
8. அவர் அவள்மீது வைத்திருந்த............. மிகுதியால்.
16.இவ்வாறு............பெரும் செல்வரானார்.
17.நதியைக் கடந்து...............மலைநாட்டை நோக்கி.
20.அழைத்துக் கொண்டு.............ஆற்றின் துறையை
22.உங்களிடையே வாழ்ந்து ஓரினமாக..........
25.அவனது நகரின் பெயர்.................
26. ...............செக்கேமிற்கு வந்தார்.

**வலமிருந்து இடம்:**

2. அவரைக்............நாட்டிற்கு எடுத்துச் சென்று
5. வந்த போது அவர்கள்............இருக்கக் கண்டார்.
12.அதற்கு..............நீர் சொன்னபடியே ஆகட்டும் என்றான்.
14.அவரை............அவர் தோளில் சாய்ந்து
15.ஏனெனில் நான்............விட்டு வரும் பொழுது
19. என்னிடமிருந்தது ஒரு ..............மட்டுமே.
21. உமது.................க் காண்பது கடவுளின்
24. அடிவாரத்திலிருந்த ஒரு ............. மரத்தடியில்

**மேலிருந்து கீழ்:**

6. நாட்டின்...............நினைவுக்கே வராது.
10. நீங்கள் ஏன் எனக்குத்............ வருவித்தீர்கள்.
11. நீங்கள் செய்தது மிகப் பெரும்...............
13. உங்கள்.........சினம் கொள்ளவேண்டாம்
14. நம் ஆண்கள்..............விருத்தசேதனம் செய்து
18.தம் தந்தையின் ............பெயரால் ஆணையிட்டு
23.நீஎழுந்து பெத்தேலுக்குப் போய் அங்கே ..........

**கீழிருந்து மேல்:**

4. ..............சொன்னவாறு செய்திருக்கிறேன்.
7. கடவுளின்.............ஏறுவதும் இறங்கு வதுமாய்.
8. அவர்கள் அவரை............கண்டுகொள்ள
9. .............வெறுப்புக்குள்ளானதை ஆண்டவர் கண்டு
14. என்னை எகிப்து நாட்டில்............ செய்யாதே.
27. பின்னர்..............ஆழ்குழி அருகில் திரும்ப வந்தார்.






**தொடக்க நூல் 26 முதல் 50 முடிய**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 3 | | | | 2 |
| | | | 6 | 5 | 18 | | 19 | | ■ |
| | 9 | 13 | | | | | | | 21 |
| | 11 | | | 4 | | 20 | | | 23 |
| | | | | 12 | | ■ | ■ | | |
| | | ■ | 10 | | | | | 14 | |
| 8 | | | | 17 | | | | | |
| | | | 15 | | | | 24 | | |
| | 22 | | | 25 | | | | | |
| 7 | 16 | | | | 26 | | | | 27 |

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**


❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-186**

தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்

தாராபுரம் – 638 656, திருப்பூர் –Dt.

செல்: **99423 11068**

# விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி



**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்." – யோவான். 11:25**

**ஜெபம்**

அன்பின் ஆண்டவரே! இரக்கமே உருவான இயேசுவே! மண்ணக வாழ்வில் மறைந்தாலும் எங்கள் மனங்களில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் உமது அடியார்

திருமதி. **ஃபபியோலா மாக்**

அவர்களுக்கு முடிவில்லா விண்ணக வாழ்வையும் நித்திய ஒளியையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக **6.2.2019** புதன்கிழமை காலை 6.00 மணிக்கு, ரெட்டியார்பாளையம் புனித ஆந்திரேயா ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

**திருமதி. ஃபபியோலா மாக்**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 23-11-1932 | 08-01-2019 |

பிரிவால் துயருறும்

திருமதி. **அருள்மரி குடும்பத்தினர்.**

இரெட்டியார்பாளையம், புதுச்சேரி.

கைபேசி: 99432 47213

---

## விண்ணக வாழ்வின் 9-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:09-09-1924



மறைவு:06-02-2010

Mrs. A. **ஆரோக்கியம்மாள்**

**W/o. அன்துவான் மரி ஜோசப்**

*"உம் கிருபையின்படி என் சத்தத்தை கேளும், உம் நியாயத்தின்படி என்னை உயிர்ப்பியும்" - (சங்.119:149)*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக **6.2.2019** புதன்கிழமை காலை 6.00 மணிக்கு, அரியாங்குப்பம் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**மகள், மகன்கள்,**

**மற்றும் குடும்பத்தினர்.**

**அரியாங்குப்பம்.**

---

## விண்ணக வாழ்வின் எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி. **சற்பிரசாதமேரி**

உதிர்ந்தது: 06-02-2011

**என் இனியவளே! இல்லற வாழ்விலே எனக்கு துணையாக வாழ்ந்தவளே! தர்மம் என்று வந்தவர்க்கு தயங்காமல் நல்கிட நற்பண்பு நல்கியவளே! உன் வழி தொடர்ந்து வரும் நானும் உன் மகன்களும் மருமகள்களும் நல்லாயன் இயேசு உமக்கு நித்திய இளைப்பாற்றி தர அனுதினமும் வேண்டுகிறோம். அவரது முடிவில்லா ஒளி உன்மேல் ஒளிர்வதாக! ஆமென். - பர.அருள்.திரி.**

**திருப்பலி: 6-2-2019 புதன்கிழமை காலை 6.15 மணிக்கு புதுச்சேரி, தாகூர் நகர் பங்கு, தூய ஆவி ஆலயத்தில் நடைபெறும்.**

என்றும் உன் நினைவில் வாழும்

கணவர்: **S. இயேசு**

மகன்கள்,மருமகள்கள்,பேரக்குழந்தைகள்.

ராமன் நகர்.

---

## விண்ணக வாழ்வின் 30 - ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்:14-11-1924



மறைவு:08-01-2019

அருட்சகோதரி **ஸ்டெல்லா செல்வம்**

**புனித சூசையப்பர் குளூனி சபை, புதுச்சேரி-1.**

"ஆண்டவரின் கரங்களில் நீ அழகிய மணிமுடியாக திகழ்வாய்" - எசா.62:3

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக **7.2.2019** வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு, புதுச்சேரி, ஒஸ்பீஸ் சிற்றாலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**குடும்பத்தினர்.**

**மற்றும் அருட்சகோதரிகள்.**

**புதுச்சேரி.**

# விண்ணக வாழ்வின் 22-ஆம் ஆண்டு நினைவேந்தல் நாள்

**திருப்பலி:** மாலை 6.00 மணி. **7-2-2019 வியாழக்கிழமை** **இடம்:** ஒட்டம்பட்டு.



**மண்ணில்**
19-10-1923
*வெள்ளிக்கிழமை*

**விண்ணில்**
07-02-1997
*வெள்ளிக்கிழமை*

## தெய்வத்திரு. V.அந்தோனி RHMP, Rtd.H.M.

*வெற்றி வேந்தர் இறையக நிறுவனர்*

### அப்பா! நீர் ஒரு இலட்சிய கனவாளி !

எம் அன்புத் தந்தையே ! நீர் வான்வீட்டில் நுழைந்து முடிவில்லா வாழ்வின் இருபத்து இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. மீண்டும் நாங்கள் உம் துயில் கொள்ளும் புனித பூமிக்கு திருயாத்திரை மேற்கொண்டுள்ளோம். எங்கள் சக்தியின் ஆற்றலாய் துலங்கும் உம்மை நினைவு கூறுகின்றோம்.

இவ்வாண்டு உம்மை நினைக்கின்றபொழுது உம் இலட்சிய கனவுகள் எம் நினைவுக்கு வருகின்றன. வெற்றிவேந்தர் மையம் உம் இலட்சிய கனவு – அதை ஓர் இறையாட்சியை பறைசாற்றும் நடுவமாக மாற்ற வேண்டும் என்ற உம் இலட்சிய கனவு நிறைவேறிகொண்டிருப்பதை நீர் இப்போது காணவேண்டும்.

நீர் வாங்கிய மண்ணின் எல்லா பகுதிகளும் இதற்காகவே பயன்படுகின்றது. நீர் கட்டிய வெற்றிவேந்தர் ஆலயத்தின் முன்விரிவாக்கம் அலங்காரமாயுள்ளது. இறைவார்த்தையின் பரப்புறை பணிக்காக உயர் ஒலிபெருக்கி நிறுவி விட்டோம். உம் பிள்ளைகளின் அருட்சாதனங்கள் அனைத்தும் இங்குதான் கொண்டாடப்படுகின்றன.

அன்பு அப்பா! உம் மண்ணில் ஒரு துளி விடாமல் இறைமாட்சிக்கே அர்ப்பணித்துள்ளோம் உம் இலட்சிய கனவை நிறைவேற்றும் உம் மக்களை நினைத்து பெருமை கொள்ளுங்கள் இன்னும் அதிகமாய் ஏழைகளுக்கு நற்செய்தியூட்டும் பணித்திட்டங்களை முன்னெடுக்க உம் பரிந்துரை செபங்களால் தூய ஆவியின் தூண்டல்களால் எம்மை வழிநடத்தும் – தந்தையே!

***எனவே அன்புத் தந்தையே! உம்மைப்போல இறையாட்சி கனவுகளோடு நாங்களும் வாழ்ந்து அதை பறைசாற்ற இறைவரம் வேண்டிடுவாய்!***

**எம்மில் வாழும் எம் தந்தையே உம்மை வணங்குகின்றோம்.**

**எம் தந்தையையோடு பழகியோர், உடன் உழைத்தோர், நண்பர்கள் இத்திருப்பலியில் வந்து கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.**

மகன்: அருட்தந்தை. **பிலோமின்தாஸ் A.J.**
இயக்குநர், புனித சவேரியார் மேய்ப்புப் பணி நடுவம். உப்பளம், புதுவை-1.
Ph: 0413 / 2353411 Cell: 98 42 33 33 63

மனைவி: **உத்தரியமேரி**
**தங்கை, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**07-02-2019** வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு **ஒட்டம்பட்டு** வெற்றி வேந்தர் இறையகத்தில், எம் தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படுகிறது.

**நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.**

## பெத்தி செமினேர் மேல் நிலைப்பள்ளி
## மாபெரும் அறிவியல் கண்காட்சி - ஜனவரி 19,20-2019



பெத்தி செமினேர் உப்பளம் ஆரம்பப் பள்ளி வளாகத்தில் மாபெரும் அறிவியல் கண் காட்சி வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. பள்ளி மாணவர்கள் தங்கள் காட்சி படைப்புகளைச் சென்ற வாரம் சமர்ப்பித்திருந்தனர். அதில் 40 பிரமாண்ட படைப்புகளும், 300 சிறுபடைப்புகளும் கண்காட்சிக்காகத் தேர்வு செய்தனர். முதல் நாள் 19-01-2019 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் புதுவை கல்வி அமைச்சர் மாண்புமிகு R. கமலக்கண்ணன் அவர்கள் தலைமையில் அறிவியல் கண்காட்சியைத் துவக்கி வைத்து சிறப்பு விருந்தினருடன் இணைந்து கண்காட்சியைப் பார்வையிட்டனர்.




ISRO- வின் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இணை இயக்குநர் முனைவர் ரகுநாத் ராதாகிருஷ்ணன் அவர்கள் செயற்கை கோளில் ஆண்டனாவின் பங்களிப்பினைப் பற்றி விரிவுரையாற்றினார். இவ்விழாவின் சிறப்பு அம்சமாக பள்ளி மாணவர்களுடன் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்துகொண்டு செயற்கை கோள் பற்றிய சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். ஜான்பால் கல்வியியல் கல்லூரியின் செயலர் அருட்தந்தை M.சுவாமிநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். பிரமாண்டமான ஏவுகணை, பறவை இன டைனோசர், மருத்துவ குணங்கள் கொண்ட மூலிகை தாவரங்கள், மீன் வகைகள், செவ்வாய் கிரகத்தைப் படமெடுக்கும் ரோபோ, நோய்களைக் கண்டறியும் ரோபோ, நெகிழி (பிளாஸ்டிக்) ஒழிப்பு, DNA செயல்பாடு ஆகியன கண்காட்சியின் சிறப்பு அம்சங்களாகும்.

முதல் நாள் கண்காட்சியினை 7500 பெத்தி செமினேர் மாணவர்களும், 2000 மேற்பட்ட தனியார் மற்றும் அரசுப் பள்ளி மாணவர்களும் கண்டு களித்தனர். இரண்டாம் நாள் எம் பள்ளியின் பெற்றோர், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வைக்காக கண்காட்சி திறக்கப்பட்டது; மாலை 3.00 மணியிலிருந்து இரவு 8.00 மணி வரை ஏறக்குறைய 12,000 பேருக்கு மேல் பார்வையிட்டனர். இந்நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் புதுவை மாநில் முதல்வர் ஏ.நாராயணசாமி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றி சிறந்த அறிவியல் படைப்புகளுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். மேலும் புதுவை நாடாளுமன்ற மக்கள் அவை உறுப்பினர் திரு. இரா. இராதாகிருஷ்ணன், மாண்புமிகு மு. கந்தசாமி, சமூக நலத் துறை அமைச்சர், முதலமைச்சரின் நாடாளுமன்றச் செயலர் திரு. க.லட்சுமிநாராயணன்,புதுச்சேரி அரசின் புதுதில்லி சிறப்பு பிரதிநிதி திரு. அ.ஜான்குமார் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. அ.அன்பழகன் மற்றும் திரு.இரா. சிவா அவர்களும் சிறப்பித்தனர். இந்தக் கண்காட்சி ஏற்பாட்டினைப் பள்ளி முதல்வர் அருட்தந்தை R.பால்கல்ராஜ் தலைமையில், துணை முதல்வர், அருட்திரு. P.லூர்துஜெயராஜ் இருபால் ஆசிரியர்களும் மாணவர்களும், பெற்றோர் களும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தகவல்: அருட்தந்தை R.பால்கல்ராஜ், முதல்வர், பெத்தி செமினேர் பள்ளி.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...



4. அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியுள்ள சிறுபான்மையினருக்கான கல்வி உரிமையைக் காக்க வேண்டிய அரசு, அவற்றின் நிர்வாக உரிமைகளை முடக்கக் கூடாது எனவும் வற்புறுத்துகிறோம்.

5. அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட ஊதியம், படிகள், பணிகொடைகள், பணி உயர்வு வாய்ப்புக்கான முதுநிலை, தேர்வு ஊதியங்கள், ACP / MACP ஆகிய உரிமைகளையும் உரிய காலகட்டத்தில் வழங்க வேண்டும் என வேண்டுகிறோம். ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு மருத்துவப் படி வழங்கவேண்டும்.



6. புதிய ஓய்வூதிய (CPS) திட்டத்தை 01.01.2004-க்கு பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு அமுல்படுத்த வேண்டும்.

7. உதவி பெறும் பள்ளிகளுக்கான போதனா மற்றும் நிர்வாக மானியத்தை 25:1 என்ற மாணவர் ஆசிரியர் விகிதச்சார அடிப்படையில் மேல்நிலைப்பள்ளி வரை விரிவாக்கியும், அரசு மானியத்தை 95% என்பதை 100% ஆக உயர்த்தியும் வழங்கி ஏழை, நடுத்தர குடும்ப மாணவர்கள் தரமான கல்வியை பெற ஆவண செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வேண்டுகிறோம்.



8. ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு மருத்துவப் படியும், மாதக் கடைசியில் பென்ஷனும் வழங்க வேண்டும்.

அருட்தந்தை M.சுவாமிநாதன்
செயலர், போன்சியான்
புதுவை.

---

**புத்தகக் கண்காட்சி:சென்னை:** அண்மையில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ திடலில் 17 நாட்கள் புத்தக கண்காட்சி நடைபெற்றது. இதனைப் பார்வையிட சுமார் 15 இலட்சம் பேர் வந்திருந்தனர். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் இரண்டு இலட்சம் அதிகம். வருகை தந்த வாசகர்கள் சுமார் 70 இலட்சம் புத்தகங்களை வாங்கிச் சென்றிருக்கிறார்கள். இதன் மதிப்பு சுமார் ரூ.18 கோடி. சென்ற ஆண்டைக் காட்டிலும் சுமார் ரூ. 3 கோடி அளவுக்கு விற்பனை அதிகரித்துள்ளது. *- தினமணி.24.1.19*

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore,
by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.